விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 25 செவ்வாய் 08.06.2021 மலர் - 2, இதழ் - 63

# காலிஸ்தான் எனும் விஷச்செடி

பஞ்சாப் பொற்கோயிலில் ஆபரேஷன் ப்ளூ ஸ்டார் நடந்ததை நினைவுகூறும் விதமாக, கடந்த ஜூன் 6, காலிஸ்தான் தினமாக, காலிஸ்தான் பயங்கரவாதிகள் மற்றும் அதன் ஆதரவாளர்களால் அனுசரிக்கப்பட்டது.

**ஆபரேஷன் ப்ளூ ஸ்டார்:**

அமிர்தசரஸ் பொற்கோயிலில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகளை ஒடுக்க, அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி உத்தரவின் பேரில் பாரத ராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையான ஆபரேஷன் ப்ளூ ஸ்டார் ஜூன் 1 முதல் ஜூன் 8, 1984 வரை நீடித்தது. இதில், 83 ராணுவ வீரர்கள் 492 பொதுமக்கள் உயிரிழந்தனர். இதற்கு பழிவாங்கும் வகையில்தான் இந்திரா காந்தி அவரது சீக்கிய மெய்க்காப்பாளர்களால் படுகொலை செய்யப்பட்டார். இதையடுத்து காங்கிரசாரால் நாடு முழுவதும் நடத்தப்பட்ட சீக்கிய எதிர்ப்பு கலவரத்தில் சுமார் 8.000 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

**கிரிக்கெட் வீரர்:**

காலிஸ்தான் தினத்தை முன்னிட்டு, முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங், தனது இஸ்டாகிராமில், காலிஸ்தானிய பயங்கரவாதி பிந்த்ரான்வாலேவை தியாகி என பாரட்டியதோடு மரியாதையும் செலுத்தியுள்ளார். இது அவரது ரசிகர்கள் மற்றும் பொதுமக்களிடையே மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**பொற்கோயில்:**

இந்த நிகழ்வையொட்டி, பொற்கோயிலில், ஷிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டி தலைவர் பிபி ஜாகிர் கவுர்,ஹர் பிரித் சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், பயங்கரவாதி பிந்த்ரான்வாலின் மகன், அவரது குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர். அங்கு ‘காலிஸ்தான் ஜிந்தாபாத்’ கோஷங்களும் எழுப்பப்பட்டன.

**சந்தர்ப்பவாத கூட்டணி:**

தங்கள் இனத்தை கொன்றதாக பஞ்சாபியரும் காலிஸ்தானிகளும் கருதும் கங்கிரசாருடன்தான் தற்போது அவர்கள் கூட்டணி வைத்துள்ளனர். பஞ்சாப்பை காங்கிரஸ் கட்சிதான் தற்போது ஆட்சி செய்து வருகிறது. குருநானக் யாரை எதிர்த்து சீக்கிய மதத்தை நிறுவினாரோ அவர்களுடனேயே இணைந்துதான் காலிஸ்தான் பயங்கரவாதிகள் செயல்படுகின்றனர். இவையனைத்தும், அவர்களுக்கு கொள்கை என்பது இல்லை என்பதையும் அவர்களது அப்பட்டமான சந்தர்ப்பவாத கூட்டணியையுமே வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.

மங்கும் புகழ்:

வீரத்திற்கு பெயர் பெற்ற சீக்கியர்கள், தற்போது போதைக்கு அடிமையாவது, வன்முறைகளில் ஈடுபடுவது எல்லாம் காலிஸ்தான், முஸ்லிம் பயங்கரவாத கூட்டணியால்தான். காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சிகளின் ஆதரவுடன் இதே காலிஸ்தான் வன்முறையாளர்கள்தான் விவசாய சட்ட எதிர்ப்பு எனும் பெயரில் குடியரசு தினத்தன்று டெல்லி செங்கோட்டையில் வன்முறை நிகழ்த்தினர். தேசியக்கொடியை அவமானப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.







# வடபழனி கோயில் சொத்து மீட்பு

ஹிந்து அறநிலையத்துறை அதிகாரிகளின் அலட்சியம், ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணைபோவது, அரசியல்வாதிகளின் தலையீடு உள்ளிட்ட காரணங்களால், தமிழகம் முழுவதும் பல்வேறு ஹிந்து கோயில்களின் பலகோடி மதிப்புள்ள சொத்துக்கள், ஆக்கிரமிப்பு, விற்பனை என களவாடப்பட்டுக் கொண்டுள்ளது. எந்த ஆட்சி வந்தாலும் நடவடிக்கை எடுப்பதில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டு.

இந்நிலையில், வடபழநி முருகன் கோயிலின் ரூ. 300 கோடி மதிப்பிலான சொத்துக்கள் தமிழக அரசின் முயற்சியால் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அமைச்சர் சேகர்பாபு, 'கோயில் சொத்தில் தனியார் கொள்ளையடிப்பதை அனுமதிக்க முடியாது. இதனை தடுக்க காவல்துறை, மாநகராட்சி, அறநிலையத்துறை இணைந்து தற்போது, வடபழநி கோயிலுக்கு சொந்தமான ரூ.300 கோடி மதிப்புள்ள 5.5 ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம். இது டிரெய்லர்தான் இனிமேல்தான் மெயின் பிக்சரை பார்ப்பீர்கள். அனைத்து கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்' என செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த சொத்துக்களை மீட்க ஹிந்து முன்னணி உள்ளிட்ட பல்வேறு ஹிந்து அமைப்புகள் தொடர் போராட்டங்கள், சட்ட போராட்டங்கள் நடத்தின என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மீட்பு நடவடிக்கையை எடுத்த தமிழக முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் சேகர் பாபு, அதிகாரிகளுக்கு வாழ்த்துக்கள்.



## ஸ்மார்ட் மூவ்




செய்தி இணையதளங்கள், சமூக ஊடகங்கள், யூடியூப் போன்ற பல்வேறு தளங்களில் இடதுசாரிகளின் ஆதிக்கமே நிறைந்துள்ளது. இடதுசாரி ஊடகங்களுக்கு சவால் விடும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் நோக்கம் நல்லதாக இருந்தாலும் அதற்கான முன்னேற்பாடுகள், பக்கபலம், வழிகாட்டுதல், ஒருங்கிணைப்பு போன்றவை இல்லாத்தால் அவர்களால் நோக்கத்தை எட்டமுடியவில்லை. ஊடகங்களில் இடதுசாரிகளின் இந்த ஏகபோகத்திற்கு சவால் விடுக்க சில தேசியவாத ஊடகங்களின் ஒத்துழைப்பால் https://smart4bharat.com என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்துவதாக சமச்சார் மன்யாட்டா அசோசியேஷன் ஃபார் ரிசர்ச் அண்ட் டிரெய்னிங் (எஸ்.எம்.ஆர்.டி) அறிவித்துள்ளது. கடந்த ஜூன் 5ம் தேதி துவங்கப்பட்ட இந்த இணையதளத்திற்கான வேலை, கடந்த அக்டோபர் 25, 2020 அன்று தொடங்கப்பட்டது. இந்த 7 மாதங்களுக்குள், இது 60 தேசிய எண்ணம் கொண்ட ஊடக உறுப்பினர்களை இதில் இணைத்தது. இதுவரை 8 கோடி பார்வையாளர்கள் இதனை பார்வையிட்டுள்ளனர்.

## பெருமாள் கோயில் வாசலில் தி.மு.க.வினர் பிரியாணி

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, ராயப்பேட்டையில் உள்ள சீனிவாச பெருமாள் கோயில் வாசலில், சிக்கன், மட்டன் பிரியாணியை தி.மு.கவினர் அப்பகுதி மக்களுக்கு வழங்கினர். இதற்காக, கோயில் வாசலை அடைத்து விளம்பர பேனரும் வைக்கப்பட்டது. தி.மு.க எம்.பி தயாநிதி மாறன், எம்.எல்.ஏ., எழிலன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர். இது, அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள், பக்தர்களிடையே அதிர்ச்சியையும், வேதனையையும் அளித்தது. தி.மு.கவினரின் இந்த செயலுக்கு, பல்வேறு ஹிந்து அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. குறிப்பிட்ட தி.மு.கவினர் மீது முதல்வர் ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.



## சட்டத்தை மீறிய அமைச்சர்



முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த நாளை முன்னிட்டு, திருச்சி, கருமண்டபத்தில் தி.மு.க.வின் சார்பில், 1,500 பேருக்கு உனவுப் பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியில், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் நேரு பங்கேற்றார். நலத்திட்ட உதவிகளைப் பெற, 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள், 200 தி.மு.க நிர்வாகிகள் பங்கேற்றனர். தமிழக அரசு அறிவித்துள்ள ஊரடங்கை அதன் அமைச்சர் ஒருவரே மீறியுள்ளார். இக்கூட்டத்தில் சமூக இடைவெளி முறையாக பின்பற்றப்படவில்லை, தி.மு.கவினர் உட்பட பலர் முகக்கவசம் அணியவில்லை. இது குறித்து, தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என நெட்டிசன்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# தடுப்பூசியில் பாரபட்சமா?



மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், 'கொரோனா தடுப்பூசிக்கான மத்திய அரசின் கொள்கை, சமீபத்தில் அமலுக்கு வந்துள்ளது. 'தடுப்பூசிகள் தயாரிக்கும், சீரம், பாரத் பயோடெக் ஆகிய நிறுவனங்களிடமிருந்து 50 சதவீத தடுப்பூசிகளை மத்திய அரசு பெற்றுக்கொள்ளும். மீதியுள்ள 50 சதவீத தடுப்பூசிகளை மாநில அரசுகளும், தனியாரும், அந்த நிறுவனங்களிடமிருந்து நேரடியாக வாங்கிக் கொள்ளலாம்' என, கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த கொள்கையால், அரசு தடுப்பூசி மையங்களில் நெருக்கடி குறைந்துள்ளது. வசதியுள்ளவர்கள், தனியார் மருத்துவமனைக்குச் செல்கின்றனர். மத்திய அரசு 50 சதவீத தடுப்பூசிகளை, மாநிலங்களின் தேவைக்கேற்ப பிரித்து வழங்கி வருகிறது. இதில் எவ்விதத்திலும் பாரபட்சம் காட்டப்படுவதில்லை. பெரிய தனியார் மருத்துவமனைகள் தடுப்பூசிகளை அதிகளவில் வாங்கியுள்ளன என கூறப்படுவதும் தவறு. சிறிய நகரங்களில் உள்ள தனியார் மருத்துவமனைகளிலும், 'கோவிஷீல்டு, கோவாக்சின்' ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் போடப்படுகின்றன' என தெரிவித்துள்ளார்.

# கோதாவரி காவிரி இணைப்பு வலியுறுத்தல்



'கோதாவரி காவிரி இணைப்பு திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தின் தண்ணீர் பற்றாக்குறைக்கு இத்திட்டம் மூலம் நிரந்தர தீர்வு காண முடியும். ஏற்கனவே காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தை அமைத்து தமிழக மக்களின் உரிமையை நிலைநாட்டி தந்த பாரதப் பிரதமர் நரேந்தர மோடி, இப்போது கோதாவரி காவிரி இணைப்பு திட்ட நடவடிக்கைகளை தொடங்கியுள்ளார். இத்திட்டம் நிறைவேறும்பொழுது தமிழகத்திற்கு ஆண்டுக்கு 100 டி.எம்.சி வரை தண்ணீர் கிடைக்கும். தமிழக விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் செய்து இது' என பா.ஜ.க மாநில தலைவர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

# சிவன் கோயில் நிலம் மீட்பு



அசாம் மாநிலம் தர்ரங் மாவட்டத்தில் சிபஜஹா தல்பூர் சிவன் கோயிலைச் சுற்றி 72 ஏக்கர் நிலம் உள்ளது. மிகப் பழமையான இக்கோயிலின் நிலம், வங்கதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக ஊடுருவியவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. 48 ஏக்கர் நிலம் அவர்கள் வசம் இருந்து வந்தது. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள முதல்வர் ஹேமந்த் பிஸ்வாஸ் சர்மாவின் ஆணையின்படி அங்குள்ள வங்கதேசத்தவர்களின் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கோயில் சொத்து மீட்கப்பட்டது.

# புதிய வருமான வரி இணையதளம்




வருமான வரி தாக்கல் செய்வதை எளிமையாக்க புதிய இணையதளத்தை வருமான வரித்துறை அறிமுகம் செய்துள்ளது. இப்புதிய தளத்தில், மக்கள் எளிதாக வருமான வரி அறிக்கையைத் தாக்கல் செய்யவும், பிற முக்கிய பணிகள் அனைத்தையும் எளிதாகக் கண்காணிக்கவும் முடியும் என ஏற்கனவே வருமான வரித் துறை தெரிவித்துள்ளது. http://www.incometax.gov.in/ என்ற இந்த புதிய இணையதளத்தில், வருமான வரி அறிக்கை அப்லோடு, செய்ய வேண்டி பணிகள், வருமான வரி அறிக்கையின் ஸ்டேட்டஸ் என அனைத்தும் ஒரே டேஷ்போர்ட்ல் தெரியும். இதன் மூலம் வரி செலுத்துவோர் எளிதாக வருமான வரி சார்ந்த அனைத்து பணிகளையும் செய்ய முடியும்.

வருமான வரி அறிக்கையைத் தயார் செய்யும் மென்பொருள் இலவசமாக அளிக்கப்படும். இதனால், சாமானிய மக்களும் எளிதாக வருமான வரி அறிக்கையைத் தாக்கல் செய்யலாம். வருமான வரி செலுத்துவோருக்கு ஏற்படும் சந்தேகங்களுக்குப் பதில் அளிக்கும் வகையில் சில புதிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு உள்ளது. வருமான வரி செலுத்துவோர் சம்பளம், வீட்டு மனைகள், வர்த்தகம் அல்லது வேலை குறித்து ஐ.டி.ஆர்ல் புரோ ஆக்டிவ் முறையில் அப்டேட் செய்யலாம். மேலும், வருமான வரி செலுத்துவோரின் கேள்விகள் மற்றும் குழப்பங்களைத் தீர்க்க புதிய கால் சென்டர் ஒன்றை நிறுவவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜூன் 18க்குப பிறகு வருமான வரித்தளத்தின் புதிய மொபைல் ஆப் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

# ஊழலுக்கு எதிரான உ.பி. அரசு




உத்தரபிரதேசத்தில் துணை நிலை மாஜிஸ்தி ரேட்டுகளாக பணியாற்றிய ராம்ஜீத் மௌரியா மிர்சாபூரில் பணி செய்தபோது ஒரு நில வழக்கில் சட்டங்களை புறக்கணித்ததாக குற்றம் சாட்டப்பட்டவர். இதேபோல, ஸ்ராவஸ்தி ஜே.பி. சவுகான், பிலிபிட்டில் பணி செய்தபோது, ஒரு நில வழக்கில் குற்றம் சாட்டப்பட்டார். அஜய் குமார், கிரேட்டர் நொய்டாவில் முறைகேட்டில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டப்பட்டது. இவர்கள் மீதான ஊழல் புகார்களை அடுத்து, மாநில அரசு ஒரு விசாரணை குழுவை அமைத்தது. விசாரணையில், அவர்கள் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டது. இதனால், உ.பி அரசு, அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களை தாசில்தாராக தரமிறக்கியதுடன் அவர்களுக்கு இரண்டு ஊதிய உயர்வுகளையும் நிறுத்தி வைக்கவும் உத்தரவிட்டுள்ளது. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மாநிலத்தில் எந்த ஊழலையும் பொறுத்துக்கொள்ள மாட்டேன் என்று முன்பே எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிந்து வர்த்தர்களுக்கு அச்சுறுத்தல்



பாகிஸ்தானின் பலுச்சிஸ்தான் மாகாணத்தில் குஜ்தார், வாத் சந்தையில் வர்த்தகம் செய்யும் ஹிந்து வர்த்தகரான அசோக் குமார் என்பவரை முஸ்லிம் பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றனர். மேலும், அப்பகுதியில் உள்ள ஹிந்து கடைக்காரர்கள், தங்கள் கடையில் முஸ்லிம்களுக்கு வியாபாரம் செய்தால் கொல்லப்படுவர் என மிரட்டல் விடுத்ததுடன், அப்பகுதியில் அது குறித்த துண்டு பிரசுரங்களையும் ஒட்டிச்சென்றனர். அங்குள்ள ஹிந்து வியாபாரிகளை மிரட்டி பணம் பறித்து வருகின்றனர் என 'தி எக்ஸ்பிரஸ் டிரிப்யூன்' செய்தி வெளியிட்டுள்ளது. பாகிஸ்தானில், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் வன்முறைகள் அங்கு தொடர்கதையாகி வருகின்றன. அவர்கள் வழிபாட்டுத் தலங்கள் தாக்குதல்கள் நடக்கின்றன. அங்குள்ள சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பெண்களின் நிலை மிகவும் மோசமக உள்ளது.

# ஹங்கேரி மக்கள் ஆர்பாட்டம்



ஹங்கேரி தலைநகர் புதாபெஸ்ட்டில், சீனாவின் ஷாங்காயை தலைமையிடமாகக் கொண்ட ஃபுடான் பல்கலைக் கழகம் அமைவதற்கு அந்த நாட்டு அரசும் அந்த பல்கலைக் கழகமும் சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு மக்கள் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர். இந்த கல்வி வளாகம் ஹங்கேரியின் கல்வித் தரத்தை பாதிக்கும். ஹங்கேரி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் சீனர்கள் தங்கள் செல்வாக்கை அதிகரிக்க உதவும் என்று ஹங்கேரி மக்கள் கூறுகின்றனர். ஆனால், ஹங்கேரியர்களுக்கு தரமான கல்வியை வழங்க இதும் உதவும் என்று ஹங்கேரி அரசு கூறி வருகிறது. மேலும், அந்நாட்டு பிரதமர் விக்டர் ஆர்பன், வரும் 2022ல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் சீனா மற்றும் ரஷ்யாவுடனான உறவுகளை வேகமாக மேம்படுத்தி வருகிறார் என குற்றச்சாட்டும் வைக்கப்படுகிறது.

# பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரி

ஜி 7 நாடுகள் அமைப்பில் உள்ள கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் தலைவர்கள் கூட்டம் பிரிட்டனில், வரும் 11, 12, 13 தேதிகளில் நடைபெற உள்ளது. அதற்கு முன்னதாக அந்த நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில், முகநூல், டுவிட்டர், அமேசான், கூகுள் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் வரி ஏய்ப்பில் ஈடுபடுகின்றன என பல்வேறு நாடுகள் குற்றச்சாட்டுகள் வைக்கின்றன. எனவே, சர்வதேச அளவில் சீரான வரி விதிப்பு முறை குறித்து இந்த நிதியமைச்சர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அதில், இது போன்ற நிறுவனங்கள், தாங்கள் செயல்படும் நாடுகளில் 15 சதவீத வர்த்தக வரியை செலுத்த வேண்டும். தங்கள் லாபத்தின் ஒரு பகுதியை அந்த நாட்டில் மீண்டும் முதலீடு செய்ய வேண்டும். இதனால், அந்நிறுவனங்கள், வரி குறைந்த நாடுகளில் முதலீடுகளை குவிப்பது, வரி எய்ப்புகள் செய்வதை தடுக்க முடியும் என வலியுறுத்தப்பட்டது.

# சேவைத்துளிகள்

கும்மிடிப்பூண்டி சுண்ணாம்பு குளம் உடையவர் கோட்டை கிராமம் சுற்று பகுதியில் உள்ள 60 மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு ஸ்ரீ ராமானுஜா அறக்கட்டளை மூலமாக மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.





மதுரை, ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி யின் சார்பில் கோவிட் தொற்று பாதிக்கப்பட்டுள்ள ஆரம்பநிலை தொற்றாளர்களுக்கு ஆயுஷ் சிகிச்சை முகாம் துவங்கப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சேவைப்பிரிவான சேவாபாரதி சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு மூன்று ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் வழங்கப்பட்டன. மேலூர் இதேபோன்ற இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான கொரோனா வார்டில் உள்ளோரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டன.






திருநெல்வேலி அரசு பொது மருத்துவமனையில் சேவாபாரதி சார்பாக தகவல் மையம் துவங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதன்மை தலைவர் மருத்துவர் ரவிச்சந்திரன் கலந்துகொண்டார். அங்கு வந்தவர்களுக்கு கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

அரிசி மற்றும் மளிகை பொருட்கள் அடங்கிய கிட் ஹிந்து முன்னணியின் வில்லிவாக்கம் தொகுதி பொறுப்பாளர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

